RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 6 | ஜனவரி.11 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## தணிக்கை சான்றிதழ் வழங்க காலக்கெடு நிர்ணயிக்க வேண்டும்'' : கமல்ஹாசன்



சென்னை, ஜன.11-

"தணிக்கை சான்றிதழ் வழங்க வரையறுக்கப்பட்ட காலக்கெடு, வெளிப்படையான மதிப்பீடு ஆகியவைதான் இப்போதைய தேவை" என மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

'ஜனநாயகன்' திரைப்படத்துக்கு தணிக்கை சான்றிதழ் வழங்கும் விவகாரம் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ள நிலையில் இதுகுறித்து கமல்ஹாசன் வெளியிட்ட அறிக்கையில், 'இந்திய அரசியலமைப்புச் சட்டம் கருத்துச் சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது. அது பகுத்தறிவால் வழிநடத்தப்பட வேண்டுமே தவிர, தெளிவற்ற தன்மையால் முடக்கப்படக் கூடாது. இது எந்த ஒரு திரைப்படத்தையும் விடப் பெரியது. இது அரசியலமைப்பு ஜனநாயகத்தில் கலைக்கும் கலைஞர்களுக்கும் நாம் வழங்கும் இடத்தையே பிரதிபலிக்கிறது.

சினிமா என்பது ஒரு தனிநபரின் உழைப்பு மட்டுமல்ல, எழுத்தாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், கலைஞர்கள், திரையரங்கு உரிமையாளர்கள் மற்றும் நியாயமான மற்றும் சரியான நேரத்திலான செயல்முறையை நம்பி வாழும் சிறு வணிகங்கள் அடங்கிய ஒரு சூழல் அமைப்பின் கூட்டு முயற்சியாகும்.

தெளிவு இல்லாதபோது, படைப்பாற்றல் கட்டுப்படுத்தப்படுகிறது, பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன மற்றும் பொதுமக்களின் நம்பிக்கை பலவீனமடைகிறது. தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் உள்ள சினிமா ரசிகர்கள் கலைகளின் மீது ஆர்வத்தையும், பகுத்தறியும் திறனையும், முதிர்ச்சியையும் கொண்டுள்ளனர். அவர்களுக்கு தேவை வெளிப்படைத்தன்மையும், மரியாதையும் ஆகும்.

இப்போது தேவைப்படுவது, தணிக்கை சான்றிதழுக்கான வரையறுக்கப்பட்ட காலக்கெடு, வெளிப்படையான மதிப்பீடு மற்றும் பரிந்துரைக்கப்படும் ஒவ்வொரு வெட்டு அல்லது திருத்தத்திற்கும் எழுத்துப்பூர்வமான, காரணத்துடன் கூடிய விளக்கத்துடன், சான்றிதழ் வழங்கும் செயல்முறைகளை ஒரு கொள்கை ரீதியாக மறுபரிசீலனை செய்வதாகும்.

முழு திரைப்படத் துறையும் ஒன்றிணைந்து, நமது அரசு நிறுவனத்துடன் அர்த்தமுள்ள, ஆக்கபூர்வமான உரையாடலில் ஈடுபடுவதற்கான தருணமும் இதுதான். இத்தகைய சீர்திருத்தம் படைப்புச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும். அரசியலமைப்பு மதிப்புகளை நிலைநிறுத்தும். மேலும் கலைஞர்கள் மற்றும் மக்கள் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்துவதன் மூலம் இந்தியாவின் ஜனநாயக நிறுவனங்களை வலுப்படுத்தும்' எனத் தெரிவித்துள்ளார்.

## 'குறள் வாரம்' நிகழ்வுகளுக்கான சிறப்புக் காணொலி : முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியீடு




சென்னை, ஜன.11-

குறள் வாரவிழா நிகழ்வுகளுக்கான சிறப்பு காணொலியையும், பதாகையினையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: முக்கடல் சூழும் குமரி முனையில், முப்பால் புலவர் வள்ளுவருக்கு முன்னாள் முதல்வர் கருணாநிதி வைத்த சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவையொட்டி 31.12.2024ஆம் நாளன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற வெள்ளிவிழா நிகழ்ச்சியில் முதல்வர் மு.க. ஸ்டாலின், "தமிழின் பெருமையை, குறளின் அருமையை இளைய தலைமுறைக்கு கொண்டு செல்லும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் கடைசி வாரம் 'குறள் வாரம்' கொண்டாடப்படும் எனவும், தமிழ்த் திறனறித் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான திருக்குறள் மாணவர் மாநாடு ஆண்டுதோறும் நடத்தப்படும்" எனவும் அறிவித்தார்.

மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்திடும் பொருட்டு, 2026ஆம் ஆண்டு ஜனவரியில் "குறள் வாரவிழா" கொண்டாடிட ஆணையிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், சேலம், திருச்சிராப்பள்ளி, தேனி, கடலூர் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் திருக்குறள் நாட்டிய நாடகம் / இசை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் பொதுமக்கள் மட்டும் பங்கேற்கும் வகையில் குறள் ஓவியம்/குறள் ஒப்பித்தல் போட்டி நடைபெறவுள்ளது.

கோயம்புத்தூர், வேலூர், தஞ்சாவூர், விருதுநகர் ஆகிய நான்கு மாவட்டங்களில் கல்லூரி மாணவர்களுக்கான குறள் சார்ந்த கலை நிகழ்ச்சிகள் மற்றும் ஓவியம், படத்தொகுப்புப் போட்டிகள் நடைபெறவுள்ளன. மதுரை, ஈரோடு, நாமக்கல், திருவாரூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் பார் போற்றும் பட்டிமன்ற நடுவர்கள் தலைமையில் திருக்குறள் சார்ந்த பட்டிமன்றம் நடைபெறவுள்ளது.

சென்னை, வள்ளுவர் கோட்டத்திலும், மெரினா கடற்கரையிலும் ஜேம்ஸ் வசந்தனின் தமிழோசை நிகழ்ச்சி பெருநகர சென்னை மாநகராட்சி ஒருங்கிணைப்பில் நடைபெறவுள்ளது. திருப்பூரில் 21.01.2026 புதன்கிழமையன்று அரசு அலுவலர்கள், பணியாளர்கள் ஆசிரியர்கள் பெரும் அளவில் பங்குபெறும் குறளாசிரியர் மாநாடு (ம) குறள் வினாடிவினா நிகழ்ச்சிகள் மாவட்ட நிருவாக ஒருங்கிணைப்பில் நடைபெறவுள்ளன.

முதல்வர் மு.க.ஸ்டாலினின் அறிவுரைக்கிணங்க, தமிழ் மொழிக்கென்று முதன்முறையாக ஆண்டுதோறும் நடத்தப்பெற்றுவரும் திறனறித் தேர்வில் வெற்றி பெற்ற 1500 மாணவர்கள் கலந்து கொள்ளும் குறள் மாணவர் மாநாடு கன்னியாகுமரியில் 23.01.2026 மற்றும் 24.01.2026 ஆகிய இரு நாள்கள் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் நடைபெறவுள்ளன.

"திருக்குறள் திருவிழா தமிழ் மக்களுக்கானத் தெவிட்டாதப் பெருவிழா" என்ற பெருமிதத்துடன் குறள் வாரம் நிகழ்வுகளுக்கென தயாரிக்கப்பட்டுள்ள சிறப்புக் காணொலியையும், நிகழ்வுகளுக்கானப் பதாகையினையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (10.01.2026) முகாம் அலுவலகத்தில் வெளியிட்டார்.

இந்நிகழ்வில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையர் மற்றும் திருக்குறள் வார விழா நிகழ்வுகளுக்கான சிறப்பு அலுவலர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஒளவை அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஜன.28ல் தொடக்கம்: பிப்ரவரி 1ம் தேதி பட்ஜெட் தாக்கல்



புதுடெல்லி, ஜன.11-

இந்த ஆண்டில் முதல் நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஜனவரி 28ம் தேதி தொடங்குகிறது. இதுகுறித்து மத்திய அரசு அதிகாரிகள் நேற் று கூறியதாவது: நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு, நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெறும் தேதிகள் குறித்து இறுதி முடிவெடுத்துள்ளது. ஜனவரி 28ம் தேதி முதல் நாள் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உரையாற்றுகிறார். அடுத்த நாள் 29ம் தேதி பாதுகாப்புப் படையினர் பாசறைக்குத் திரும்பும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

(குடியரசு தினம் 26ம் தேதி நடைபெறுகிறது. அன்று பாதுகாப்புப் படையினரின் அணிவகுப்புகள் நடைபெறும். அதன்பின், 29ம் தேதி குடியரசு தினவிழா நிறைவை குறிக்கும் வகையில் பாதுகாப்புப் படையினர் பாசறை திரும்பும் நிகழ்ச்சி நடைபெறுவது வழக்கம்.) அதனால் அன்றைய தினம் நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெறாது.

ஜனவரி 30ம் தேதி பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்படும். ஜன.31ம் தேதி நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை அலுவல்கள் நடைபெறாது. பிப்ரவரி 1ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 9வது முறையாக மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்கிறார்.

பின்னர் குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம், பட்ஜெட் மீதான விவாதம் நடைபெறும். பிப்ரவரி 13ம் தேதி கூட்டத்தொடர் ஒரு மாத விடுமுறைக்கு ஒத்திவைக்கப்படும்.

மார்ச் 9ம் தேதி மீண்டும் கூட்டத் தொடர் தொடங்கி, ஏப்ரல் 2ம் தேதி வியாழக்கிழமை நிறைவு பெறும். வழக்கமாக நாடாளுமன்ற கூட்டத்தொடர் வெள்ளிக்கிழமை ஒத்திவைக்கப்படும். இந்த ஆண்டு ஏப்ரல் 3ம் தேதி புனித வெள்ளி வருவதால், ஒரு நாள் முன்னதாக கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்படுகிறது.

முதல் கட்ட நாடாளுமன்ற கூட்டத்தொடர் முடிந்து ஒரு மாத விடுமுறையின் போது, பல்வேறு துறைகளின் நிலைக் குழுக்கள், கோரிக்கைகள், மானியங்கள் தொடர்பாக ஆய்வு செய்ய உதவியாக இருக்கும். இவ்வாறு மத்திய அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## உக்ரைன் மீது ரஷ்யா கடும் தாக்குதல்: 4 பேர் உயிரிழப்பு



கீவ், ஜன.11-

ரஷ்யாவும் உக்ரைனும் 2022 பிப்ரவரி முதல் போரிட்டு வருகின்றன. இதில் ஏராளமானோர் உயிரிழந்தனர். இந்நிலையில் உக்ரைன் மீது ரஷ்யா நேற்று முன்தினம் இரவு கடும் தாக்குதல் நடத்தியது.

இதுகுறித்து உக்ரைன் அதிகாரிகள் நேற்று கூறுகையில், "36 ஏவுகணைகள், 242 டிரோன்களை பயன்படுத்தி இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் கீவ் நகரில் 4 பேர் இறந்தனர். 22 பேர் காயம் அடைந்தனர்" என்றனர். இந்த தாக்குதலுக்கு உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கண்டனம் தெரிவித்துள்ளார்.

## சென்னையில் அனுமதியின்றி பொது இடங்களில் மரம் வெட்டுவோருக்கு ரூ.1 லட்சம் அபராதம்



சென்னை, ஜன.11-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உரிய அனுமதியின்றி பொது இடங்களில் மரங்களை வெட்டுபவர்களுக்கு ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கப்படும் என சென்னை மாநகராட்சி எச்சரித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பு: பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பசுமைப் பரப்பினை அதிகரித்திடும் வகையில் பல்வகை மரக்கன்றுகள் நடப்பட்டும், குறுங்காடுகள் உருவாக்கப்பட்டும், பராமரிக்கப்பட்டு வருகின்றன. பொது இடங்களில் உள்ள மரங்கள் மற்றும் மரக்கிளைகளை அத்துமீறி வெட்டுபவர்களுக்கு அபராதம் விதித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும் வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள மரங்களின் கிளைகளை அகற்றுதல், காய்ந்து போன மரங்களை அகற்றுதல், மாற்று இடங்களில் மரங்களை நடுதல் மற்றும் மரங்களை அகற்றுதல் உள்ளிட்ட சேவைகளுக்கு இதுவரை அரசு மற்றும் தனியார் விண்ணப்பங்கள் வனத்துறை மூலமாக பெறப்பட்டு, இந்த விண்ணப்பங்கள் மாவட்ட பசுமைக் குழுவிற்கு நேரடியாக அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த சேவையினை பொதுமக்கள் எளிமையாக பயன்படுத்துவதற்கும் காலதாமதத்தை குறைத்து துரித நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி ஒரு புதிய முன்னெடுப்பை தற்பொழுது மேற்கொண்டுள்ளது.

அவ்வாறாக மரங்கள் அகற்றுதல் மற்றும் மரக்கிளைகள் அகற்றுதல் உள்ளிட்ட சேவைகள் வனத்துறை மூலமாக நேரடியாக விண்ணப்பித்த நிலையை மாற்றி 12.01.2026 முதல் அனைத்து விண்ணப்பதாரர்களும், விண்ணப்பங்களை பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் (https://chennaicorporation.gov.in/gcc/) மற்றும் நம்ம சென்னை செயலி மூலமாக மட்டுமே விண்ணப்பிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசு மற்றும் தனியார் விண்ணப்பதாரர்கள் இந்த சேவையை பெறுவதற்கு மாநகராட்சி இணையதளத்தில் பசுமைக் குழு போர்ட்டலில் விண்ணப்பிக்கலாம். மேலும் பெறப்பட்ட விண்ணப்பங்களை பெருநகர சென்னை மாநகராட்சி பூங்கா கண்காணிப்பாளர்/மேற்பார்வையாளர், சமூக ஆர்வலர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்கள் மூலமாக கள ஆய்வு மேற்கொள்ளப்படும்.

கள ஆய்வின் ஆய்வறிக்கினை பசுமை குழுவிற்கு அனுப்பப்படும். பசுமைக் குழுவின் நடவடிக்கை விபரங்கள் குறுஞ்செய்தியாக விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தின் வாயிலாகவும் விண்ணப்பதாரர்கள் தெரிந்து கொள்ளலாம். பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உரிய அனுமதியின்றி பொது இடங்களில் மரங்களை வெட்டுபவர்களுக்கு ரூ.1 லட்சமும், மரக்கிளைகளை வெட்டுதல், மரத்தில் ஆணி அடித்து விளம்பரப் பலகைகள் பொருத்துதல், மரங்களைச் சுற்றி விளக்குகள் பொருத்துதல் உள்ளிட்டவற்றிற்கு ரூபாய் 15 ஆயிரமும் அபராதமாக விதிக்கப்படும்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மரங்கள் அகற்றுதல் மரக்கிளைகள் அகற்றுதல் உள்ளிட்ட பல்வேறு சேவைகளுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் மற்றும் நம்ம செயலில் மூலமாக பொதுமக்கள் விண்ணப்பித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தணிக்கை சான்றிதழ் வழங்க காலக்கெடு நிர்ணயிக்க வேண்டும்'' : கமல்ஹாசன்

சென்னை, ஜன.11-

"தணிக்கை சான்றிதழ் வழங்க வரையறுக்கப்பட்ட காலக்கெடு, வெளிப்படையான மதிப்பீடு ஆகியவைதான் இப்போதைய தேவை" என மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார். 'ஜனநாயகன்' திரைப்படத்துக்கு தணிக்கை சான்றிதழ் வழங்கும் விவகாரம் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ள நிலையில் இதுகுறித்து கமல்ஹாசன் வெளியிட்ட அறிக்கையில், 'இந்திய அரசியலமைப்புச் சட்டம் கருத்துச் சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது. அது பகுத்தறிவால் வழிநடத்தப்பட வேண்டுமே தவிர, தெளிவற்ற தன்மையால் முடக்கப்படக் கூடாது. இது எந்த ஒரு திரைப்படத்தையும் விடப் பெரியது. இது அரசியலமைப்பு ஜனநாயகத்தில் கலைக்கும் கலைஞர்களுக்கும் நாம் வழங்கும் இடத்தையே பிரதிபலிக்கிறது.

சினிமா என்பது ஒரு தனிநபரின் உழைப்பு மட்டுமல்ல, எழுத்தாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், கலைஞர்கள், திரையரங்கு உரிமையாளர்கள் மற்றும் நியாயமான மற்றும் சரியான நேரத்திலான செயல்முறையை நம்பி வாழும் சிறு வணிகங்கள் அடங்கிய ஒரு சூழல் அமைப்பின் கூட்டு முயற்சியாகும்.

தெளிவு இல்லாதபோது, படைப்பாற்றல் கட்டுப்படுத்தப்படுகிறது, பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன மற்றும் பொதுமக்களின் நம்பிக்கை பலவீனமடைகிறது. தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் உள்ள சினிமா ரசிகர்கள் கலைகளின் மீது ஆர்வத்தையும், பகுத்தறியும் திறனையும், முதிர்ச்சியையும் கொண்டுள்ளனர். அவர்களுக்கு தேவை வெளிப்படைத்தன்மையும், மரியாதையும் ஆகும்.

இப்போது தேவைப்படுவது, தணிக்கை சான்றிதழுக்கான வரையறுக்கப்பட்ட காலக்கெடு, வெளிப்படையான மதிப்பீடு மற்றும் பரிந்துரைக்கப்படும் ஒவ்வொரு வெட்டு அல்லது திருத்தத்திற்கும் எழுத்துப்பூர்வமான, காரணத்துடன் கூடிய விளக்கத்துடன், சான்றிதழ் வழங்கும் செயல்முறைகளை ஒரு கொள்கை ரீதியாக மறுபரிசீலனை செய்வதாகும்.

முழு திரைப்படத் துறையும் ஒன்றிணைந்து, நமது அரசு நிறுவனத்துடன் அர்த்தமுள்ள, ஆக்கபூர்வமான உரையாடலில் ஈடுபடுவதற்கான தருணமும் இதுதான். இத்தகைய சீர்திருத்தம் படைப்புச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும். அரசியலமைப்பு மதிப்புகளை நிலைநிறுத்தும். மேலும் கலைஞர்கள் மற்றும் மக்கள் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்துவதன் மூலம் இந்தியாவின் ஜனநாயக நிறுவனங்களை வலுப்படுத்தும்' எனத் தெரிவித்துள்ளார்.

## வண்டலூர் ஊராட்சியில் அரசு பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்குதல் சமையற்கூடம் (ம) புதிய நியாய விலை கடை திறப்பு விழா





செங்கல்பட்டு, ஜன.11-

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் வண்டலூர் ஊராட்சிக்கு உட்பட்ட ஓட்டேரி விரிவு பகுதியில் உள்ள அரசினர் மேல்நிலைப்பள்ளியில் தமிழக அரசின் விலை யில்லா மிதிவண்டி வழங்கும் விழா, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம் சார்பில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 8.65 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமையற்கூடம் திறப்பு விழா மற்றும் தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை சார்பில் மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் ரூபாய் 13 லட்சத்து 43 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலை கடை கட்டிடம் திறப்பு விழா நடைபெற்றது. இதில் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆறுமுகம் அனைவரையும் வரவேற்றனர். காட்டாங்கொளத்தூர் ஒன்றிய குழு முன்னாள் துணை தலைவர் தேவேந்திரன், வடக்கு ஒன்றிய மாவட்ட பிரதி நிதி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவருமான குணா (எ) குணசேகரன், துணைத் தலைவர் கவிதா சத்யநாராயணன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக செங்கல்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், காட்டாங்கொளத்தூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் உதயா கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டு 150க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கினார்கள், இதனைத் தொடர்ந்து ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம் சார்பில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 8.65 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமையற்கூடம் கட்டிடம் (ம) ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை சார்பில் ரூபாய் 13 லட்சத்து 43 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலை கடை ஆகிய கட்டிடத்தினை சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் திறந்து வைத்தார்கள். நிகழ்ச்சியில் 9வது வார்டு உறுப்பினர் ஜெகன் தேவேந்திரன், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## காளையார்கோவிலில் மாணவர்களுக்கான அறிவியல் கண்காட்சி





காளையார் கோவில், ஜன.11-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஸ்ரீ சரஸ்வதி விகாஸ் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் திருவிழா மற்றும் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தாளாளர்கள் சேகர் ஸ்டாலின் ரவீந்திரன் லெனின் ஜீவானந்தம் ஆகியோர் தலைமையேற்றனர். தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி மற்றும் அறிவியல் இயக்கத்தின் காளையார்கோவில் உறுப்பினர் பாண்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர். அறிவியல் திருவிழாவில் இயற்கை ஆதாரங்களின் பாதுகாப்பு மரபுசாரா ஆற்றல்களின் பயன்பாடு வேதிவினை களின் போது ஏற்படும் வெப்ப மாற்றங்கள் இயற்கை நிறங்காட்டிகள் சுற்றுப்புற மாசுபாடுகளை குறைக்கும் வழிமுறைகள் ஆற்றல் மாற்றங்கள் எளிய சோதனைகள் மூலம் பல்வகை வாயுக்களை உருவாக்குதல் தகவல் தொடர்பு சாதனங்களின் பயன்பாடு இவற்றுடன் தொடர்புடைய 100க்கும் மேற்பட்ட செயல்திட்டங்கள் அனைவரையும் வியக்கும் வண்ணம் மாணவர்களால் சிறப்பாகக் காட்சிப்படுத்தப்பட்டது. பெற்றோர்கள் குழந்தை களின் படைப்புகளை மகிழ் வோடு கண்டுகளித்தனர். பள்ளியின் அனைத்து ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் அறிவியல் ஆசிரியர்கள் இவ்விழாவிற்கு சிறப்பாக ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். செயல்திட்டங்களைத் தயாரித்த அனைத்து மாணவர்களுக்கும் பள்ளி நிர்வாகத்தின் சார்பாக பரிசுகள் வழங்கப்பட்டன.



ஊதிய உயர்வு, பணி பாதுகாப்பு உள்ளிட்ட 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி

## ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்க பணியாளர்கள் ஐந்தாவது நாளாக தொடர் காத்திருப்பு போராட்டம்

தேனி, ஜன.11-

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்க அனைத்து பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு இன்று ஐந்தாவது நாளாக தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்க பணியாளர்களுக்கு அடிப்படை ஊதிய உயர்வு வழங்க வேண்டும், மாவட்ட அலுவலகத்தில் இருந்து பணியாளர்களுக்கு நேரடியாக வங்கி கணக்கில் ஊதியம் வழங்கப்பட வேண்டும்

பத்து ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றும் பணியாளர்களுக்கு பணி பாதுகாப்பு மற்றும் பணி நிரந்தரம் வழங்க வேண்டும்.

காலை உணவு திட்டத்தில் பணி புரியும் பணியாளர் களுக்கு சத்துணவு சட்ட பணியாளர்களுக்கு இணையான மதிப்பூதியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதாரப் பணியா ளர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பி ஐந்தாவது நாளாக தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்

## கோவையில் ‘ஆல் நியூ’ கியா செல்டோஸ் அறிமுகம்: பிரீமியம் எஸ்யூவி பிரிவில் புதிய தரநிலையை உருவாக்கும் பிரசன்னா கியா



கோவை, ஜன.11-

இந்தியாவின் முன்னணி கியா டீலர்களில் ஒன்றாக விளங்கும் பிரசன்னா கியா, கோயம்புத்தூரில் ஆல்நியூ கியா செல்டோஸ் காரை பெருமையுடன் அறிமுகப்படுத்தியுள்ளது. நவீன வசதிகள், மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் உயர்தர பாதுகாப்பு அம்சங்களுடன் இந்த புதிய செல்டோஸ், பிரீமியம் எஸ்யூவிபிரிவில் புதிய அத்தியாயத்தை தொடங்கியுள்ளது.

கோயம்புத்தூர் - திருச்சி சாலை, அவினாசி சாலை, பொள்ளாச்சி, ஊட்டி, திருப்பூர், ஈரோடு, கரூர், நாமக்கல் உள்ளிட்ட கொங்கு மண்டலத்தின் முக்கிய பகுதிகளுக்கு முழுமையான சேவை யினை வழங்கி வரும் பிரசன்னா கியா நிறுவனம், கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலான ஆட்டோமொபைல் அனுபவத்துடன் வாடிக்கை யாளர்களின் நம்பிக்கையை பெற்றுள்ளது. இதன் சிறப்புக்குச் சான்றாக, நுகர்வோரால் அதிகம் நம்பப்படும் ரீடெய்ல் வணிக நிறுவனம் என்ற விருதையும் நிறுவனம் பெற்றுள்ளது.

கம்பீரமான வெளிப்புற வடிவமைப்பு, நவீன தொழில்நுட்ப வசதிகள் மற்றும் பிரிவு முன்னணி பாதுகாப்பு அம்சங்கள் ஆகியவற்றின் சிறந்த கலவையாக உருவாக்கப்பட்டுள்ள ஆல் நியூ கியா செல்டோஸ், ஓட்டுநர்களுக்கு சிறப்பான டிரைவிங் அனுபவத்தை வழங்குகிறது. செயல்திறன், சொகுசு மற்றும் புதுமைகள் ஒருங்கிணைந்த இந்த எஸ்யூவி, வாடிக்கை யாளர்களின் எதிர்பார்ப்பை மீறி நிற்கிறது.

ஆல் நியூ கியா செல்டோஸ் சக்திவாய்ந்த மற்றும் எரிபொருள் சிக்கனமான என்ஜின் விருப்பங்களில் கிடைக்கிறது.

1.5 லிட்டர் பெட்ரோல் என்ஜின் - மேனுவல், ஐவிடி மற்றும் டீசிடிடிரான்ஸ்மிஷன்

1.5 லிட்டர் டீசல் என்ஜின் - மேனுவல் மற்றும் ஆட்டோமேட்டிக் டிரான்ஸ்மிஷன்

பெட்ரோல் மாடல்கள் ரூ. 10.99 லட்சம் முதல், டீசல் மாடல்கள் ரூ. 12.59 லட்சம் முதல் அறிமுகமாகியுள்ளது.

இந்த விலை வரம்பில் மேம்பட்ட ஏடீஏஎஸ் தொழில்நுட்பம், பிரீமியம் உட்புற அமைப்பு மற்றும் உயர்தர ஓட்டுநர் அனுபவம் ஆகியவற்றை வழங்குவதால், புதிய கியா செல்டோஸ் தனது பிரிவில் மிகச் சிறந்த மதிப்புள்ள எஸ்யுவியாக திகழ்கிறது.

இதனிடையே, கொங்கு மண்டலத்தில் உள்ள அனைத்து பிரசன்னா கியா ஷோரூம்களிலும் டெஸ்ட் டிரைவ் மற்றும் முன்பதிவுகள் அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டுள்ளன. வாடிக்கையாளர்கள் நேரடியாக காரை ஓட்டிப் பார்த்து, புதிய அனுபவத்துடன் வாங்கி மகிழலாம் என பிரசன்னா கியா நிறுவனம் அழைப்பு விடுத்துள்ளது.



■ சிவகங்கை மாவட்டம், இளையான்குடி அருகே உள்ள திருவள்ளூர் கிராமத்தில் நேற்று நடைபெற்ற பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்கச் சென்ற மானாமதுரை எம்எல்ஏ தமிழரசி, திருவேங்கடம் கிராம வயல்வெளியில் நடைபெற்று வந்த நெல் அறுவடை பணிகளை நேரில் பார்வையிட்டார். பின்னர் அறுவடை இயந்திரத்தை தானே இயக்கி, விவசாயிகளுடன் இணைந்து நெல் அறுவடையில் ஈடுபட்டார்.




■ புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா அதிரான் விடுதி செல்லும் சாலை அருகே மின் கம்பம் சாய்ந்த நிலையில் உள்ளன அதை விரைந்து சீரமைக்க பொதுமக்கள் சமூக ஆர்வலர்

## சாலை பாதுகாப்பு மாத விழா - விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது






திருப்புவனம், ஜன.11-

சிவகங்கை மாவட்டத்தில் சாலை விபத்துகளை குறைத்து, பொதுமக்களிடையே பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சாலை பாதுகாப்பு மாத விழா அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் நகர் பகுதியில் வாகன ஓட்டிகளுக்கான சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி சிவகங்கை மாவட்ட வட்டார போக்குவரத்து அலுவலர் கருப்பணன் வாகன ஓட்டிகளுக்கு நேரடியாக விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

அப்போது அவர் பேசுகையில், ஹெல்மெட் அணியாமல் இருசக்கர வாகனங்களை ஓட்டக் கூடாது, கார் ஓட்டும் போது சீட் பெல்ட் கட்டுவது கட்டாயம், அதிக வேகத்தில் வாகனங்களை இயக்கக் கூடாது, மதுபோதையில் வாகனம் ஓட்டுவது தன்னை மட்டுமல்ல, பிறர் உயிர்களையும் ஆபத்தில் ஆழ்த்தும் என எடுத்துரைத்தார்.

மேலும், சாலை விதிமு றைகளை கடைபிடிப்பதன் மூலம் விபத்துகளை தவிர்க்க முடியும் என்றும், ஒவ்வொருவரும் சாலை பாதுகாப்பு குறித்து பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் திருப்புவனம் காவல்துறை யினர் கலந்து கொண்டு வாகன ஓட்டிகளுக்கு சாலை விதிமுறைகள் குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கினர். மேலும் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு யூனிபார்ம் அணிந்து செல்ல வேண்டும் என்றும் சவுண்ட் ஹாரன் பொருத்தக் கூடாது என்றும் விதிமுறைகளை மீறக்கூடாது என்றும் அறிவுறுத்தினார் சைக்கிளில் வருபவர்களை சாலையைக் கடக்கும் போது இருபுறமும் பார்த்து கவனித்துக் கடக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தனர் அவர்களுக்கு சாலையின் விதிமுறைகளின் நோட்டீஸ் வழங்கப்பட்டது.

## இளையான்குடி திமுக பேரூர் இளைஞரணி சார்பில்பைரோஸ் கான் ஏற்பாட்டில் திராவிடப் பொங்கல்: தமிழரசி ரவிக்குமார் , நஜ்முதீன், சுப. மதியரசன் , டி. கே. இபுறாஹீம் பங்கேற்பு




இளையான்குடி, ஜன. 11-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பேரூர் திமுக இளைஞர் அணி அமைப்பாளர் பைரோஸ்கான் ஏற்பாட்டில் , சமத்துவ,சகோதரத்துவ, சமூக நீதி பொங்கல் விழாவானது பேரூர்க் கழக செயலாளர், பேரூராட்சி மன்றத் தலைவர் பிஎ. நஜிமுதீன் தலைமையிலும் இளையான்குடி வடக்கு ஒன்றிய செயலாளர் சட்டமன்ற மேனாள் உறுப்பினர் சுப. மதியரசன், இளையான்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் வே.தமிழ் மாறன், பள்ளித் தாளாளர் காதர் பாட்சா, பேரூராட்சி மன்றத் துணைத்தலைவர் டி.கே. இப்ராஹீம், பேரூர்க்கழக இளைஞரணி துணை அமைப்பாளர்களான புதூர் இப்றாஹீம் ஷா, முகமது அல் அர்ஷத், யூசுப் அஷ்ரப், அஸ்லம், முகமது சதாம் ஆகியோரது முன்னி லையிலும் நடைபெற்றது.


பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் பைரோஸ் கான் வரவேற்புரையாற்றிட மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் ஆ.தமிழரசி ரவிக்குமார் சேலை, கைத்தறி ஆடை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் மற்றும் சர்க்க ரைப் பொங்கல் வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் மாவட்ட திமுக விவசாய அணி துணை அமைப் பாளர் காளிமுத்து , கண்ணமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க மேனாள் தலைவர் சுப.தமிழரசன், மானாமதுரை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கண்ணன் ஒன்றிய துணை செயலாளர் சிவனேசன், கருணாகரன், கவுன்சிலர்கள் தௌலத், மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் , கவுன்சிலர் இஸ்ரின் பேகம் கனி, ராஜவேலு, சவுரியத், ரவூப், ஜெயினுலாபுதீன், கம்பன் காதர், அப்சல் ஜமால், சிராஜ், ராஜா சிங், வெற்றி, அர்ஷத், அஸ்லாம் யூசுப் நிஜார், பிடல் காஸ்ட்ரோ,சபீப் ரஹ்மான் ,மணி மொழியன், இளையான்குடி தெற்கு ஒன்றிய ஐடி விங் அமைப்பாளர் ஆரோன் கிங் கிரேஸ் , ஆதில், நீலமேகம், தினகரன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் இளையான்குடி பேரூர்க்கழக தகவல் தொழில் நுட்ப அணி அமைப் பாளர் வே. மணிமொழியான் நன்றி கூறினார்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை இளையான்குடி பேரூர்க்கழக இளைஞரணி அமைப்பாளர் பைரோஸ்கான் சிறப்பாக செய்திருந்தார்.

# சிவ வழிபாட்டில் மஞ்சள், குங்குமம் பயன்படுத்தக் கூடாது ஏன் தெரியுமா?



சிவ பூஜை செய்வது என்பது மிக உயர்ந்த பூஜையாக கருதப்படுகிறது. இதில் சில பொருட்கள் தான் பயன்படுத்த வேண்டும். சில பொருட்களை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும் என்ற நியதி உள்ளது. அப்படி தவிர்க்க வேண்டிய பொருட்களாக மஞ்சள், குங்குமம் குறிப்பிடப்படுகிறது. சிவ பூஜையில் இவற்றை எதற்காக தவிர்க்க வேண்டும், இதற்கு என்ன காரணம் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

சைவ வழிபாட்டில், சிவபெருமானின் அருள் நிலைத்திருக்க சில குறிப்பிட்ட பொருட்களையே அர்ப்பணிக்க வேண்டும் என்பது ஆகம பாரம்பரிய நம்பிக்கையாகும். அதனால் தான் சந்தனம், வில்வ இலை, பச்சரிசி, திருநீறு இவை சிவ வழிபாட்டில் முதன்மை பெறுகின்றன. இவை அனைத்தும் சிவபெருமானை மகிழ்வித்து, அவரது அருளை எளிதில் பெறுவதற்கு உரியவையாக கருதப்படுகின்றன. ஆனால்,மஞ்சளும் குங்குமமும் சிவலிங்கத்திற்கு அர்ப்பணித்து, வழிபாட்டிற்கு பயன்படுத்தப்படுவது கிடையாது. இவை இரண்டு இந்து சாஸ்திரத்தில் முக்கிய மங்கள பொருட்களாக கருதப்பட்ட போதிலும், சிவ வழிபாட்டில் இவற்றை கண்டிப்பாக பயன்படுத்தக் கூடாது என சொல்லப்படுகிறது. ஏன் இப்படி சொல்கிறார்கள்? இதற்கு என்ன காரணம் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

மஞ்சள் குங்குமம் :

அழகு, சுபம், திருமண பாக்கியம் என பெண் சக்தியை குறிக்கும் அடையாளமாக குங்குமம் கருதப்படுகிறது. அதனால், திருமணமான பெண்கள் குங்குமம் பூசுவது வழக்கம். ஆனால்,சிவபெருமான் உலக இன்பங்களில் இருந்து முற்றிலும் விலகிய மகா துறவி என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது. அழகு, ஆடம்பரம், புலன் இன்பங்கள் இவை அனைத்தையும் துறந்தவர் சிவன். இதன் காரணமாகவே பெண்பால் சுபச்சின்னமாகக் கருதப்படும் குங்குமம் சிவ வழிபாட்டில் பயன்படுத்தப்படுவதில்லை. மேலும் குங்குமம் மஞ்சளில் இருந்து தயாரிக்கப்படுகிறது. மஞ்சள் உடல் அழகு, மங்களம், இல்லற வாழ்வுடன் தொடர்புடையதாக கருதப்படுவதால் அதையும் சிவ வழிபாட்டில் தவிர்க்கும் வழக்கம் உள்ளது.

திருநீறு, சிவனின் அடையாளம். திருஞானசம்பந்தர் பாடிய "மந்திரமாவது நீறு" என்ற வாக்கியமே திருநீற்றின் மகிமையை உணர்த்துகிறது. பசுவின் சாணம், பசு நெய், மூலிகைகள் கொண்டு மிகுந்த தவமும் சுத்தமும் கொண்டு அரிதாக தயாரிக்கப்படுவது தான் தூய விபூதி (திருநீறு). அழகுக்காக அல்லஞ் அகந்தையை அழிக்கஞ்நிலையாமையை உணர்த்தஞ்திருநீறு நெற்றியில் பூசப்படுகிறது. அதனால் தான், அவரவர் வசதிக்கேற்ப எளிமையோடு, இயல்பான மனநிலையில் திருநீறு அணிந்து சிவனை வழிபடுதல் உயர்ந்த வழிபாடாகக் கருதப்படுகிறது.

சிவ பெருமான் எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளாகவும், அவர் அக்னி வடிவமாகவும் கருதப்படுகிறார். அதனால் குளிர்ச்சியை தரக் கூடியாக, இதம் தரும் பொருட்களை மட்டுமே சிவனுக்கு படைக்க வேண்டும் என்பார்கள். அதே சமயம் மஞ்சள் என்பது உடல் வெப்பநிலையை சீராக்க பயன்படுத்தப்படும் பொருளாகும். குங்குமம், உடலில் உள்ள ஆற்றலை அதிகரிக்க செய்யும் பொருளாகும். அதனால் இவை இரண்டுமே சிவ வழிபாட்டில் தவிர்க்க வேண்டிய பொருட்களாக சொல்லப்படுகின்றன.

அன்னை பார்வதிக்கு குங்குமம் ஏன்?

சிவ வழிபாட்டில் குங்குமம் தவிர்க்கப்பட்டாலும், அன்னை பார்வதிக்கு குங்குமம் அவசியம். குங்குமம், மஞ்சள் இருண்டுமே மங்களத்தின் அடையாளம். சர்வலோகத்திற்கும் அன்னையாக திகழும் பராசக்தி, நித்ய சுமங்கலியாகவும், மங்களரூபினியாகவும், மங்களத்தின் அடையாளமாகவும் கருதப்படுவதால் அன்னைக்கு மஞ்சள், குங்குமம் அவசியமான பொருட்களாக படைத்து வழிபடப்படுகிறது. அன்னை பார்வதிக்கு இந்த மங்கள பொருட்களை படைத்து வழிபடுவதால் நம்முடைய வாழ்க்கையும் மங்களகரமாக அமைய அன்னை அருள்புரிவாள் என நம்பப்படுகிறது. சிவன் + சக்தி = பரிபூரணம். அன்னைக்கு குங்குமம் அளித்து,சிவனுக்கு திருநீறு, சந்தனம் அர்ப்பணித்தால் இருவரின் முழு அருளும் கிடைக்கும் என்பது சைவ நம்பிக்கை.

# உப்பு, பால் கீழே சிந்தினால் அபசகுனம் என சொல்வது ஏன் தெரியுமா?



உப்பு, பால் உள்ளிட்ட பொருட்கள் வீடுகளில் பயன்படுத்தப்படும் அத்தியாவசிய பொருட்களில் ஒன்றாகும். இவை கை தவறி கீழே கொட்டுவது சில நேரங்களில் நடப்பதுண்டு. ஆனால் இது சாதாரண நிகழ்வாக பார்க்கப்படுவது கிடையாது. இதை மிகப் பெரிய அபசகுனமாகவும், தீமையின் அறிகுறியாக மக்கள் கருதுகிறார்கள். இதற்கு என்ன காரணம், இதனால் தீமை ஏற்படாமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்றும் தெரிந்து கொள்ளலாம்.

இந்து மத சாஸ்திர நம்பிக்கைகளின் படி, உப்பு மற்றும் பால் கீழே கொட்டினால் அதை அபசுகுனம் என்பார்கள். வீட்டில் பால், உப்பு கை தவறி கீழே கொட்டினால் அது கெட்ட நடக்க போவதற்கான அறிகுறி என்றும், இதனால் துன்பங்கள் ஏற்படும் என்று சொல்லுவார்கள். ஏன் இப்படி சொல்கிறார்கள்? இதற்கு என்ன காரணம்? கை தவறி பால், உப்பு கீழே கொட்டி விட்டால் அதனால் துன்பமோ, தீமையோ ஏற்படாமல் இருக்க என்ன செய்யலாம் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

சாஸ்திர முறைகளின் படி, பால் மற்றும் உப்பு மிகவும் புனிதமானதாகவும், மகாலட்சுமியின் அம்சமாகவும் கருதப்படுகிறது. பால் செழிப்பின் அடையாளமாகவும், லட்சுமி தேவி மற்றும் சந்திர பகவானுடன் நெருங்கிய தொடர்புடையதாகவும் பார்க்கப்படுகிறது. உப்பு வாழ்வின் சாராம்சமாகவும், சுக்கிர பகவான் மற்றும் நல்ல அதிர்ஷ்டத்துடன் தொடர்புடையதாகவும் கருதப்படுகிறது. இவை வெறும் உணவுப் பொருட்கள் மட்டுமல்ல, வீட்டில் ஆசீர்வாதங்கள் மற்றும் நல்ல ஆற்றல்களின் ஆதாரங்களாகவும் நம்பப்படுகின்றன.

பால் பொங்கி சிந்துவது ஏன் கெட்ட சகுனம்?

பால் பொங்கி சிந்துவது அல்லது கீழே கொட்டிவிடுவது மிகவும் அசுபமானதாக கருதப்படுகிறது. பால் நேரடியாக சந்திரனுடன் தொடர்புடையது. சந்திரன், மனதுடன் தொடர்புடைய கிரகம். பால் சிந்துவது வீட்டில் அமைதியைக் குலைத்து, குடும்பத்தில் நிதி நெருக்கடியை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது. லட்சுமி தேவியை அவமதிப்பதாகக் கருதப்படுகிறது. இதனால் வீட்டில் ஆசீர்வாதங்களும், செழிப்பும் குறையக்கூடும்.

உப்பு சிந்துவது ஏன் கெட்ட சகுனம்?

மகாலட்சுமி அவதரித்த பாற்கடலில் தோன்றியது உப்பு என்பதால், இது மகாலட்சுமி வாசம் செய்யும் பொருட்களில் ஒன்றாக கருதப்படுகிறது. உப்பு சிந்துவது வீட்டில் வறுமையைக் கொண்டு வரும் என்றும், குடும்ப உறுப்பினர்களிடையே சண்டைகள் அல்லது கசப்புணர்வை ஏற்படுத்தும் என்றும் கூறப்படுகிறது. உப்பை சிந்துவது துரதிர்ஷ்டத்தின் அறிகுறியாக கருதப்படுகிறது. உப்பு சிந்துவது வீட்டில் நேர்மறை ஆற்றலைக் குறைத்து, மன அழுத்தத்தை அதிகரிக்கும்.

உப்பு மற்றும் பால் இரண்டும் மங்கள பொருட்களாகவும், மகாலட்சுமியின் அம்சமாகவும் கருதப்படுவதால், என்னதான் கை தவறி கீழே விழுந்த பிறகு நாம் சுத்தம் செய்தாலும் அதில் சிறிதளவாவது நம்முடைய காலில் மிதிபடுவதற்கு வாய்ப்புள்ளது. இது மகாலட்சுமியை அவமதிக்கும் செயல் என்பதால் அவரை கோபப்படுத்தும் என்பதால், தவறி கூட பால், உப்பு கீழே கொட்டக் கூடாது என்பார்கள்.

பால், உப்பு கீழே சிந்தினால் என்ன செய்ய வேண்டும்?

உப்பு தரையில் சிந்தினால், அதை ஒருபோதும் துடைப்பத்தால் துடைக்கவோ அல்லது நேரடியாக கைகளால் எடுக்கவோ கூடாது. வாஸ்து சாஸ்திரத்தின்படி, சிந்திய உப்பின் மீது சிறிது தண்ணீர் ஊற்றி அதை கரைக்க வேண்டும். பின்னர் ஒரு துணியால் சுத்தம் செய்ய வேண்டும். அதே போல் பால் பொங்கி சிந்திவிட்டாலோ அல்லது தற்செயலாக கொட்டிவிட்டாலோ, அந்த இடத்தை உடனடியாக சுத்தம் செய்ய வேண்டும். அதன் பிறகு, அந்த இடத்தில் சிறிது கங்கை நீரைத் தெளிக்க வேண்டும் அல்லது சுத்தமான தண்ணீரால் கழுவ வேண்டும். இது வீட்டில் அமைதி மற்றும் செழிப்புக்கு ஏற்படும் எந்த அச்சுறுத்தலையும் தவிர்க்கும். மேலும், எதிர்மறை ஆற்றலை அகற்றும்.

# தமிழ்நாட்டின் வேலூரில் பிறந்த நியூஸி. ஒருநாள் அணியின் புதுமுகம் ஆதித்யா அசோக்



இந்தியாவுக்கு எதிராக ஒருநாள் போட்டித் தொடரில் மோதும் நியூஸிலாந்து அணியில் இடம்பெற்றுள்ள புதுமுக லெக் ஸ்பின்னர் ஆதித்யா அசோக் தமிழ்நாட்டு வம்சாவளித் தொடர்புடையவர்.

இவர் தமிழ்நாட்டின் சென்னைக்கு அருகேயுள்ள வேலூரில் பிறந்தவர். இவருக்கு 4 வயதாக இருந்தபோது இவர் குடும்பம் நியூஸிலாந்தின் ஆக்லாந்திற்கு குடியேறினர். முதல் ஒருநாள் போட்டி நடைபெறும் வதோதராவில் இவரது குடும்ப உறவினர்கள் உள்ளனர்.

இவர் லெக் ஸ்பின்னர் என்பதோடு நல்ல வலுவான கூக்ளி பந்துகளை வீசுவது இவரது பலம். இஷ் சோதியின் வழிவருபவர் என்கிறது இவரைப்பற்றிய தகவல்கள். 23 வயதாகும் ஆதித்யா அசோக் 3 வெள்ளைப்பந்து சர்வதேசப் போட்டிகளில் ஆடியுள்ளார். கடைசியாக டிசம்பர் 2023ல் சர்வதேச வெள்ளைப்பந்து போட்டியில் ஆடினார்.

நியூஸிலாந்து ஏ அணியில் லிஸ்ட் ஏ மற்றும் 4 நாள் கவுண்டி போட்டிகளில் வங்கதேசம் மற்றும் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றி முதலிடம் பிடித்தவர்.

இதில் இன்னொரு சுவாரஸ்யமான விஷயம் என்னவெனில் இரண்டு ஏ தொடர்களுக்கு இடையே அவர் சென்னையில் சூப்பர் கிங்ஸ் அகாடமிக்கும் வருகை தந்தார் என்பதே, இதில் ஸ்பின் மையப் பயிற்சியில் கலந்து கொண்டு அரிய நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டார்.

இவர் இதுவரை 2 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் மற்றும் ஒரு டி20 போட்டியில் மொத்தம் 2 விக்கெட்டுகளையே கைப்பற்றியுள்ளார். 23 முதல் தரப் போட்டிகளில் 78 விக்கெட்டுகளையும் 39 லிஸ்ட் ஏ போட்டிகளில் 52 விக்கெட்டுகளையும் அனைத்து டி20களில் 32 ஆட்டங்களில் 31 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார். சுமாராக பேட்டிங்கும் ஆடக்கூடியவர். லிஸ்ட் ஏவில் 61 என்ற அதிகபட்ச ஸ்கோருடன் 282 ரன்களை எடுத்துள்ளார்.

# ஆஸ்திரேலிய வீரர் கவாஜா ஓய்வு



சிட்னி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியுடன் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் உஸ்மான் கவாஜா சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார். 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடர் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கி நேற்றுடன் முடிவடைந்தது. இந்த தொடரை ஆஸ்திரேலியா அணி 41 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது.

இந்நிலையில் ஆஷஸ் டெஸ்ட் தொடருக்கு பிறகு ஓய்வு பெறுவதாக ஆஸ்திரேலிய வீரர் உஸ்மான் கவாஜா கடந்த வாரம் அறிவித்து இருந்தார். இந்த தொடரில் அவர் ஒரு அரை சதம் மட்டுமே அடித்திருந்தார். அவரது கடைசி இன்னிங்ஸிலும் ஏமாற்றத்தை அளித்தார்.

நேற்றைய போட்டியில் அவர் 6 ரன்கள் மட்டுமே சேர்த்து ரசிகர்களை ஏமாற்றினார். இதைத் தொடர்ந்து கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக கவாஜா அறிவித்தார். சக அணி வீரர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

39 வயதான உஸ்மான் கவாஜா 88 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 6,229 ரன்களைக் குவித்துள்ளார். சராசரி 42.95 ஆகும். 16 சதமும், 28 அரைசதமும் எடுத்துள்ளார்.

ஆஷஸ் தொடருக்கு பிறகு ஓய்வு பெற்ற 7வது ஆஸ்திரேலிய வீரர் உஸ்மான் கவாஜா ஆவார். இதற்கு முன்பு ஆஸ்திரேலிய ஜாம்பவான் டான் பிராட்மேன், டேமியன் மார்ட்டின், ஜஸ்டின் லாங்கர், ஷேன் வார்னே, கிளென் மெக்ராத், மைக்கேல் கிளார்க் ஆகியோரும் ஆஷஸ் தொடருக்கு பிறகு ஓய்வு பெற்றனர்.

அதிக ரசிகர்கள் வருகை:

இந்த ஆஷஸ் கிரிக்கெட் தொடரை அதிக ரசிகர்கள் நேரில் கண்டுகளித்து சாதனை படைத்துள்ளனர். 5 போட்டிகள் கொண்ட இந்த ஆஷஸ் தொடரைக் காண மொத்தமாக 8 லட்சத்து 59 ஆயிரத்து 580 ரசிகர்கள் வருகை தந்துள்ளனர்.

கடந்த ஆண்டு இந்தியா ஆஸ்திரேலியா அணிகள் மோதிய பார்டர் கவாஸ்கர் டெஸ்ட் தொடரில் மொத்தமாக 8 லட்சத்து 37 ஆயிரத்து 879 பேர் வருகை தந்த நிலையில் அந்த வருகை சாதனையை இந்த ஆண்டு ஆஷஸ் தொடர் முறியடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்து வீரர்களின் 'குடிபோதை' கலாச்சாரம் ஒழிக்கப்பட வேண்டும் – மைக்கேல் வான் காட்டம்



ஆஷஸ் டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி சந்தித்த மோசமான தோல்விக்குப் பிறகு, அந்த அணியில் பல மாற்றங்கள் தேவை என முன்னாள் இங்கிலாந்து கேப்டன் மைக்கேல் வான் கடுமையாக விமர்சித்துள்ளார். ஆனால் அவற்றில் முதன்மையானது அணியின் கலாச்சாரம் (culture) தான் என அவர் தெரிவித்துள்ளார்.

அணி மீதான கட்டுப்பாடுகளும் வீரர்களின் சுயக்கட்டுப்பாடும் மிகவும் தளர்வாகவும் கட்டுப்பாடற்றதாகவும் உள்ளன, குறிப்பாக அணியின் குடிபோதைக் கலாச்சாரத்தை முதலில் ஒழிக்க வேண்டும் என்கிறார் மைக்கேல் வான்.

இங்கிலாந்து டி20 கேப்டனாக அறிவிக்கப்படும் முன்பு இங்கிலாந்தின் டெஸ்ட் வைஸ் கேப்டன் ஹாரி புரூக் நியூஸிலாந்தில் ஒரு மதுபான விடுதிக்கு செம குடிபோதையில் சென்றுள்ளார், ஏற்கெனவே அவர் நிற்க முடியாத அளவுக்குக் குடித்திருந்ததால் 'பவுன்சர்' அவரை உள்ளே விட மறுக்க அங்கு கைகலப்பில் ஈடுபட்டார், இது தெரியவந்தவுடன் மன்னிப்புக் கோரினார். 41 என்று உதை வாங்கிய சமீபத்திய ஆஷஸ் தொடரின் போது பகலிரவு பயிற்சி ஆட்டத்தைத் துறந்து நூசா கடற்கரையில் மதுபோதை விருந்தில் களியாட்டம் போட்டனர். இதனையடுத்து பிரிஸ்பனிலும் தோல்வி, அடுத்து அடிலெய்டிலும் தோற்று ஆஷஸ் தொடரை 11 நாட்களில் இழந்தனர் இங்கிலாந்து. இது கடும் சர்ச்சைகளை அங்கு ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில்தான் மைக்கேல் வான் 'தி டெலிகிராப்' ஊடகத்தில் எழுதிய பத்தியில் இங்கிலாந்தின் குடி கலாச்சாரம் ஒழிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார். "நீங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் கட்டுப்படுத்தக்கூடிய அனைத்திலும் முழு கவனம் இருக்க வேண்டும், இந்த தொடருக்கு முன்பே பலர் இங்கிலாந்தின் தயாரிப்பு முறை இங்கு வேலை செய்யாது என பலரும் எச்சரித்தனர். அவசரமான பயிற்சி போட்டிகள், பிடிவாதமான அணுகுமுறை ஆகியவை தொடக்கத்திலிருந்தே குறையாக இருந்தன. இந்த தொடரில் சில தருணங்களில் இங்கிலாந்து போட்டியை தங்கள் பக்கம் திருப்பும் வாய்ப்புகள் இருந்தாலும், முக்கியமான நேரங்களில் தேவையான ஒழுக்கமும் மன உறுதியும் அவர்களிடம் இல்லை. ஆனால் ஆஸ்திரேலியாவிடம் அவை இருந்தன. காரணம், நல்ல கிரிக்கெட் அணிகள் ஒழுக்கம், தொடர்ச்சியான நடத்தை மற்றும் சிறந்த தயாரிப்பு ஆகிய அடிப்படைகளில் கட்டமைக்கப்படுகின்றன. இங்கிலாந்து அணி அதில் தோல்வியடைந்துள்ளது. தற்போதைய நிர்வாகத்தின் கீழ் இங்கிலாந்து எதையும் வெல்லவில்லை என்பதே கசப்பான உண்மை. ஒரு விளையாட்டு அணியாக, ரசிகர்களை ஏமாற்ற முடியாது. இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளிடம் இங்கிலாந்தில் 22 என்று தொடர்களைச் சமன் செய்தும் இரு அணிகளிடம் அவர்கள் மண்ணில் 4 1என்று உதை வாங்கியதையும் ரசிகர்கள் கசப்புடன் பார்த்துள்ளனர். இப்போது மாற்றம் அவசியம் என்பதை உணர வேண்டிய நேரம் இது ரூ அந்த மாற்றம் அணியின் கலாச்சாரத்திலிருந்தே தொடங்க வேண்டும்." என்று அந்தப் பத்தியில் அவர் எழுதியுள்ளார்.



# 'வா வாத்தியார்' பட ரிலீஸ் தடையை நீக்க ஐகோர்ட் மறுப்பு

கடனை திரும்ப செலுத்தாததால் 'வா வாத்தியார்' திரைப்படத்துக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க மறுத்த சென்னை உயர் நீதிமன்றம், படத்தின் உரிமைகளை ஏலத்தில் விட சொத்தாட்சியருக்கு உத்தரவிட்டுள்ளது.

திவாலானவர் என அறிவிக்கப்பட்ட அர்ஜூன்லால் சுந்தர்தாஸ் என்பவரிடம் ஸ்டூடியோ கிரீன் படத் தயாரிப்பு நிறுவனம் பெற்ற 10 கோடியே 35 லட்சம் ரூபாய் கடனை வட்டியுடன் சேர்த்து 21 கோடியே 78 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயை செலுத்த ஞானவேல் ராஜாவுக்கு உத்தரவிட வேண்டும் என்றும், ஸ்டூடியோ கிரீன் நிறுவனம் தயாரித்துள்ள 'வா வாத்தியார்' திரைப்படத்தை வெளியிட இடைக்கால தடை விதிக்க வேண்டும் எனவும், அர்ஜூன்லால் சொத்துகளை நிர்வகிக்க நியமிக்கப்பட்ட சொத்தாட்சியர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், பணத்தை திரும்ப செலுத்த ஞானவேல் ராஜா எந்த தீவிர முயற்சியும் மேற்கொள்ளவில்லை எனக் கூறி, கடன் தொகையை திரும்ப செலுத்தும் வரை 'வா வாத்தியார்' படத்தை வெளியிடக் கூடாது என தடை விதித்து உத்தரவிட்டனர்.

இந்நிலையில், 3 கோடியே 75 லட்சம் ரூபாய் செலுத்த பட நிறுவனம் தயாராக இருப்பதால், படத்துக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கக் கோரி ஞானவேல் ராஜா தரப்பில் புதிய மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், சி.குமரப்பன் அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, நீதிமன்றம் ஏற்கெனவே போதுமான கால அவகாசம் அளித்து விட்டதாக தெரிவித்து படத்துக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க மறுத்து, 'வா வாத்தியார்' படத்தின் உரிமைகளை ஏலத்தில் விட சொத்தாட்சியருக்கு உத்தரவிட்டனர்.

# கவனம் ஈர்க்கும் மீனாட்சி சவுத்ரியின் அடுத்த பட டிரெய்லர்



2024ம் ஆண்டில் ஆறு படங்களில் நடித்த மீனாட்சி சவுத்ரிக்கு கடந்த ஆண்டு ஒரே ஒரு படம் மட்டுமே நடித்திருந்தார். இருப்பினும், இந்த ஆண்டு மீண்டும் தொடர்ச்சியான படங்களுடன் மகிழ்விக்க அவர் தயாராகி வருகிறார்.

கடைசியாக துல்கர் சல்மானுடன் 'லக்கி பாஸ்கர்' மற்றும் வெங்கடேஷுடன் 'சங்கராந்திகி வஸ்துனம்' போன்ற பிளாக்பஸ்டர் படங்களில் நடித்திருந்த இவர், தற்போது நாக சைதன்யாவின் 'விருஷகர்மா மற்றும் நவீன் பாலிஷெட்டியின் 'அனகனகா ஒக ராஜு ஆகிய படங்களில் பணியாற்றி வருகிறார்.

இதில், 'அனகனகா ஒக ராஜு படம் வருகிற 14ம் தேதி பொங்கல் பண்டிகைக்கு வெளியாக உள்ளது. இந்நிலையில், இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி இருக்கிறது.



# 'பராசக்தி' தமிழ் சினிமாவில் தனியிடம் பிடிக்கும் சுதா கொங்கரா உறுதி

சுதா கொங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயன், ரவி மோகன், அதர்வா முரளி, லீலா ஆகியோர் முதன்மை கதாபாத்திரங்களில் நடித்துள்ள படம், 'பராசக்தி'. டான் பிக்சர்ஸ் சார்பில் ஆகாஷ் பாஸ்கரன் தயாரித்துள்ள இப்படம், ஜன.10ல் வெளியாகிறது.

இப்படம் குறித்து இயக்குநர் சுதா கொங்கரா பகிர்ந்து கொண்டதாவது, "'பராசக்தி' கதை நான் எழுதிய பின்பு பாராட்டுகளை பெற்ற அதேசமயம் கதையை சுற்றி பல சந்தேகங்களும் எழுந்தது. திரைக்கதை உருவாக்கமே கடினமாக இருந்தது.

இந்தக் கதையை படமாக்குவது மிகவும் சவாலானது என்றும் படம் வெளியானதும் பல விமர்சனங்களை சந்திக்க நேரிடும் என்றும் பலர் எச்சரித்தனர். இருப்பினும், மணிரத்னம் பின்பற்றும் 'சாத்தியமற்றதை சாத்தியமாக்க வேண்டும்' என்பதின் அடிப்படையில் பல சவால்களை தாண்டி இதை படமாக்கினேன்.

இந்தப் படத்தின் முதுகெலும்பு நடிகர் சிவகார்த்திகேயன். அவரது அர்ப்பணிப்பும், கதாபாத்திரத்திற்காக அவர் கொடுத்திருக்கும் உழைப்பும் நிச்சயம் பார்வையாளர்கள் மத்தியில் பேசப்படும்.

ரவி மோகனின் திரை ஆளுமை 'பராசக்தி' படத்தின் அசைக்க முடியாத பெரும்பலம். இந்தப் படத்தில் நடிக்கவேண்டும் என அவர் முடிவெடுத்ததற்கு நன்றி. திரைக்கதை எழுதும் போதே அதர்வா முரளியின் கதாபாத்திரம் என்னை உற்சாகப்படுத்தியது. அதர்வாவின் அர்ப்பணிப்பால் நான் எதிர்பார்த்ததைவிட திரையில் அவர் கதாபாத்திரம் இன்னும் நன்றாக வந்துள்ளது. ஶ்ரீலீலாவை இந்தப் படத்தில் முற்றிலும் வேறொரு கோணத்தில் பார்ப்பீர்கள். அற்புதமான நடிப்பால் தனது கதாபாத்திரத்திற்கு உயிர் கொடுத்துள்ளார்.

எனது படங்களுக்கு ஜி.வி.பிரகாஷ் குமாரின் இசை பெரும் பலம். 'பராசக்தி' படத்தில் அவரது இசையை நிச்சயம் ரசிப்பீர்கள். 'பராசக்தி' திரைப்படம் தமிழ் சினிமாவிலும் ரசிகர்களின் மனதிலும் நிச்சயம் தனியிடம் பிடிக்கும்" இவ்வாறு சுதா கொங்கரா தெரிவித்தார்.

# காரைக்குடியில் வாஜ்பாய் நூற்றாண்டு விழா - மத்திய அரசின் சாதனை விளக்க கூட்டம்






காரைக்குடி, ஜன.11-
வாஜ்பாய் நூற்றாண்டு விழா, மத்திய பாஜக அரசின் சாதனை விளக்கம் மற்றும் 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு பாஜக பிரச்சார கூட்டம் காரைக்குடியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் பேசிய பாஜக சிவகங்கை மாவட்ட தலைவர் பாண்டித்துரை, கழனிவாசல் பகுதியில் மினி டைடல் பார்க் அமைக்க அடிக்கல் நாட்டிய திமுக அரசு நான்கு ஆண்டுகள் கடந்தும் திட்டத்தை முழுமைப்படுத்தவில்லை என குற்றம்சாட்டினார்., அமராவதிபுதூர் சிப்காட் வளாகத்தில் திமுக ஆட்சிக்குப் பிறகு ஒரு தொழிற்சாலை கூட தொடங்கப்படவில்லை என்றும் கூறினார்., காரைக்குடி பாதாள சாக்கடை திட்டத்தில் பல கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளதாகவும், வீடுகள் மற்றும் கடைகளுக்கு இணைப்பு வழங்க ரூ.15,000 முதல் ரூ.30,000 வரை லஞ்சம் பெறப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். மேலும், பட்டா வழங்குவதில் திமுக பாகுபாடு காட்டுவதாகவும் குற்றம்சாட்டினார்.,பாஜக ஆட்சிக்கு வந்தால் காரைக்குடி தொகுதிக்கு ஐ.டி நிறுவனங்கள் கொண்டு வரப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். கூட்டத்தில் பாஜக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# பெண் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் சந்தை @ வைஷ்ணவ் 2.0” கோலாகலமான பொங்கல் திருவிழா




பல்லாவரம், ஜன.11-
செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் மண்ணும் மரபும் நம் நிலம், நம் பாரம்பரியம்“ எனும் கருப்பொருளில், குரோம் பேட்டை ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரியில் 09.01.2026 அன்று, சந்தை @ வைஷ்ணவ் 2.0”மிகச்சிறப்பாக நடைபெற்றது. பெண் தொழில்முனைவோரை வலுப்படுத்துவதையும், கலாச்சாரத்தைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்த விழா ஒருங்கிணைக்கப்பட்டது.

பெண்களின் பொருளாதார சுதந்திரத்தை ஊக்குவிக்கும் வகையில் அமைக்கப்பட்ட இந்தச் சந்தையில், சுமார் 125 க்கும் மேற்பட்ட ஸ்டால்கள் இடம்பெற்றன. இதில் சுற்றுச்சூழல் சார்ந்த பொருட்கள், கை வினைப் பொருட்கள், பாரம்பரிய ஆடைகள் மற்றும் ஆர்கானிக் உணவுப் பொருட்கள் எனப் பலதரப்பட்ட தயாரிப்புகளைப் பெண் தொழில்முனைவோர் காட்சிப்படுத்தினர்.

தமது வணிகத் திறனை வெளிப்படுத்தவும், நேரடி விற்பனை அனுபவத்தைப் பெறவும் மாணவியர்களுக்கும் பெண் வணிகர்களுக்கும் இது ஒரு சிறந்த தளமாக அமைந்தது.

சிறப்பு விருந்தினர்கள் மற்றும் பிரபலங்கள்: இந்தத் தொடக்க விழாவில் ‘மேபெல்’ (Maybell) நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் வடிவமைப்புத் தலைவர் மாதவி வெங்கடேஷ் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும், விழாவிற்கு கூடுதல் மெருகூட்ட டேனியல் ஜெயின் ராஜ் மற்றும் ‘மெய் மீடியா’ (Mei Media) நிறுவனத்தின் நிறுவனர் ஆர்.யுவராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக (Walk-in Celebrities) வருகை தந்து மாணவிகளை உற்சாகப்படுத்தினர். மாலை வேளையில் டிஜே ரமேஷ் (ஞியி) இசையால் வந்திருந்தோரை உற்சாகப்படுத்தினார். கலாச்சார நிகழ்வுகள்:


விழாவிற்கு மேலும் மெருகூட்டும் வகையில், தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளான உறியடித்தல் மற்றும் கயிறு இழுத்தல் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் மாணவிகள் மற்றும் பார்வையாளர்கள் மிகுந்த உற்சாகத்துடன் பங்கேற்றனர். கைரேகை பார்த்து குறி சொல்லுதல், கிளி ஜோசியம் பார்த்தல் நடைபெற்றன.

மேலும், தமிழ் மண்ணின் கலைகளான மயிலாட்டம், ஒயிலாட்டம், தப்பாட்டம் மற்றும் சிலம் பாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தன.

பெண்களின் முன்னேற்றம் மற்றும் கலைப் பாதுகாப்பு ஆகிய இரண்டையும் ஒரே இடத்தில் இணைத்த “சந்தை @ வைஷ்ணவ் 2.0”, கல்வி நிறுவனத்தின் சமூகப் பொறுப்பைப் பறைசாற்றும் வகையில் அமைந்தது.



■ தேனி மாவட்டத்தில் ஊர்க்காவல் படையில் உள்ள காலி பணியிடங்களை நிரப்பும் பொருட்டு, நேர்முகத் தேர்வு இன்று தேனி மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் நடைபெற்றது. இந்த நேர்முகத் தேர்விற்கு தேனி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் விண்ணப்பித்திருந்த நிலையில், மொத்தம் 50 ஆண்கள் மற்றும் 05 பெண்கள் கலந்து கொண்டனர். இந்நேர்முகத் தேர்வில் கலந்து கொண்ட விண்ணப்பதாரர்களுக்கான உடல் தகுதி பரிசோதனை மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பு பணிகள், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr. B. சினேஹாப்ரியா, முன்னிலையில் முறையாக மேற்கொள்ளப்பட்டது



■ மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் திருப்பூர் மாவட்டம். குண்டடம் ஊராட்சி ஒன்றியம், தாயம்பாளையம் வீ.மு.செ.த.வி மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாமினை பார்வையிட்டு முகாமில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து நலப்பெட்டகங்களை வழங்கினார்கள். உடன் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஜெயந்தி அவர்கள் உள்ளார்.

# ஐயப்பா பக்தர்களை அவதூறாக பேசிய போக்குவரத்து உதவி ஆய்வாளர்

## மதுரை மாவட்ட காவல் ஆணையாளர் நடவடிக்கை எடுப்பாரா?



மதுரை, ஜன.11-
மதுரை திருப்பரங்குன்றம் சன்னதி தெருவில் அமைந்துள்ள வளைவு அருகில் தரிசனம் முடித்துவிட்டு வேனில் ஏற வந்த ஐயப்பா பக்தர்களை ஒருமையில் அவதூறாக பேசிக்கொண்டு இருந்தார் கைபேசியில் வீடியோ எடுப்பதை பார்த்தவுடன் கண்ணியமாக நடந்து கொள்வதைப் போன்று பேசினார் பின்புறம் அமர்ந்திருந்தவர் வீடியோ எடுத்ததை கவனிக்காமல் மிகவும் அவதூறாக கொச்சையாக வாயில் வைத்து சப்பி விட்டு போ என்று பேசிய போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க பாரத் இந்து முன்னணி வலியுறுத்துகிறது.

அப்பகுதியில் ஆட்டோ நிறுத்தத்தில் உள்ள ஆட்டோ டிரைவர்கள் இவர் எப்போதும் இப்படித்தான் அவதூறாக பேசுவார் என்று வருத்தத்துடன் தெரிவித்தனர்.



■ கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரத்திற்குட்பட்ட கரிசல்பட்டி, சாரா மெட்ரிக்குலேசன் பள்ளியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு த்துறையின் சார்பில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட சிறப்பு மருத்துவ முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



# பழனி தாழையூத்து சுப்பிரமணியா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 18 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா நடைபெற்றது

திண்டுக்கல், ஜன.11-
திண்டுக்கல் மாவட்டம் பழனியில் இருந்து உடுமலை செல்லும் பாதை தாழையுத்தில் அமைந்துள்ள சுப்ரமணியா கலை மற்றும் அறிவியல் பயின்ற மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் சரவணன் முன்னிலையில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இக்கல்லூரியில் பயின்ற தமிழரசன் என்ற மாணவன் டூரிசம் ஹாஸ்பிடல் மேனேஜ்மென்ட் பிரிவில் பல்கலைக்கழக அளவில் தமிழக ஆளுநரிடம் தங்கப்பதக்கத்தை பெற்றுள்ளார் .மேலும் இந்நிகழ்வில் நிர்வாக அதிகாரி ஸ்வேதா சுப்ரமணி.. நிர்வாக அறங்காவலர் ஜெயலட்சுமி. தலைவர் சுப்பிரமணி. மற்றும் சிறப்பு விருந்தினர்கள் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர் மற்றும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பட்டங்களையும், பல்கலைக்கழக அளவில் ரேங்க் எடுத்த மாணவர்களுக்கு ரொக்கப் பரிசுகளையும் வழங்கி வாழ்த்தினார்.

நிர்வாக அதிகாரி ஸ்வேதா சுப்பிரமணியம் அவர் பேசுகையில், ‘‘பட்டங்கள் பல பெறினும் முதல் பட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது. வாழ்வில் மேன்மையுற அனைவரும் தம்மை மேம்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம். சமூக அறிவுடன் கூடிய தலைமைப் பண்பைப் பெற முயல வேண்டும். நுண்ணறிவைப் பயன்படுத்தி வாழ்வில் உயர வேண்டும். அறிவைப் பயன்படுத்தப் பயன்படுத்தத்தான் அது மேன்மையுறும். மேலும் இளைஞர்கள் உணர்ச்சி மேலாண்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். வெற்றிகரமான வாழ்க்கையை வடிவமைப்பதில் விடாமுயற்சி, அறிவு மற்றும் குணநலன் ஆகியவற்றை ஒருங்கிணைத்தால் வாழ்க்கையில் வெற்றி பெறலாம்’’ என்றார்

# காளையார்கோவில் வடக்கு நாட்டரசன்கோட்டை பேரூர் கிளை இளைஞரணி ஆலோசனை கூட்டம்: சக்திதாசன், மோகன்ராஜ் தலைமை. மதிவாணன், கிங் கார்த்திக் பங்கேற்பு



காளையார் கோவில், ஜன.11-
சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆணைக்ிணங்க திமுகவின் இளைஞரணி கட்டமைப்புகளை பட்டி தொட்டியெங்கும் பரப்பிடும் வகையில் கிளைக்கழக இளைஞரணிகளை கட்டமைக்கப்படுகிறது...

தமிழகம் முழுவதுமே கிளை நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தை வரும் வேளையில் சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வடக்கு, மற்றும் நாட்டரசன் கோட்டை பேரூர்க்கழக சார்பில் கிளைக்கழக இளைஞரணி புதிய நிர்வாகிகள் ஆலோசனை கூட்டமானது நடைபெற்றது...

காளையார்கோவில் வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சக்திதாசன், பேரூர்க்கழக இளைஞரணி அமைப்பாளர் மோகன்ராஜ் ஆகியோரது தலைமையிலும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்களான எஸ். எம். மதிவாணன், கிங் கார்த்திக், ஒன்றிய துணை அமைப்பாளர்கள் கீரனூர் கணேசன், இராணியூர் கர்ண. அருண்குமார், சொக்கனாதபுரம் கோவில்பட்டி கண்ணன் ஆகியோரது முன்னிலையிலும் நடைபெற்றது.

காளையார்கோவில் வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சக்திதாசன் , நாட்டரசன்கோட்டை பேரூர்க்கழக இளைஞரணி அமைப்பாளர் மோகன்ராஜ் ஆகியோர் வரவேற்புரையாற்றிட வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர். எம். கென்னடி, பேரூர்க்கழக செயலாளர் ஜெயராமன் ஆகியோர் ஆலோசனைகளை வழங்கினர்...

இதில் இராணிப் பேட்டை மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்களான பிரசாத், முரளி , சிவகங்கை மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்களான மதிவாணன், கிங் கார்த்தி ஆகியோரும் கிளைக்கழக இளைஞரணி நிர்வாகிகளுக்கு வரவிருக்கின்ற விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற உள்ள தென் மண்டல இளைஞரணி மாநாட்டிற்கான ஒருங்கிணைப்பு பணிகளை எடுத்துக் கூறவழங்கினர்...

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஒன்றிய அவைத்தலைவர் துருவம்பட்டி சுப. தமிழரசன், கழக மூத்த முன்னோடி, பேரூர்க்கழக முன்னாள் செயலாளர், மாவட்ட பிரதிநிதி ரைஸ்மில் கணேசன், வடக்கு ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் கொல்லங்குடி சதீஷ்குமார், சைதை அசோக், ஒன்றிய ஐடி விங் சுசீந்திரன், வீராணி வழக்கறிஞர் சதீஷ், அழகாபுரி பெருமாள், கண்டிப்பட்டி சீனு , பில்லப்பன் உள்ளிட்ட நாட்டரசன் கோட்டை பேரூர்க்கழக, காளையார்கோவில் வடக்கு ஒன்றிய, கிளைக்கழக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...




# சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் 1428 மாணவ மாணவியர்களுக்கு தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா மடிக்கணினிகளை வழங்கினார்

தாம்பரம், ஜன.11-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் அறிவியலை மாணவ, மாணவியர்கள் கரங்களில் வழங்கும் உலகம் உங்கள் கையில் என்னும் மாபெரும் திட்டத்தில் 20 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கப்படுகிறது. இதன் முதற்கட்டமாக 10 இலட்சம் மடிக்கணினிகளை கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு* மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கியதை தொடர்ந்து, 09/01/2026 அன்று சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் 1428 மாணவ மாணவியர்களுக்கு தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் மடிக்கணினிகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் பா.வில்சன், 5வது மண்டல குழு தலைவர், தாம்பரம் மேற்கு பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் பி.ஜோதிகுமார், ரமணிஆதிமூலம், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் வீ.கார்த்திக், மாநகர பிரதிநிதிகள் அ.லோகேஷ்குமார், விஜி சிவக்குமார், மாநகர மாணவரணி துணை அமைப்பாளர்கள் குட்டி(எ)தினேஷ்குமார், வழக்கறிஞர் இலக்கியா லோகநாதன், கோமதி லோகநாதன் மற்றும் கல்லூரி , பேராசிரியர்கள் மாணவ மாணவியர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161